# கிரகணங்களின் தொழுகைகள், அதற்குரிய குத்பாக்களின் விபரம்

சூரிய, சந்திர கிரகணத் தொழுகை சுன்னத்தாகும். இமாமுடன் ஜமாஅத்தாகத் தொழுவதும், தொழுகைக்குப் பின் இரண்டு குத்பாக்கள் ஓதுவதும் இதில் மார்க்கமாக்கப்பட்டுள்ளன.

கிரகணம் பிடித்த நேரத்திலிருந்து அது முடியும் வரை லுஹருடைய சுன்னத்தைப்போல் இரண்டு ரக்அத்துகள் தொழுவது சுன்னத்து. இதில் நிரப்பமான தொழுகையாவது, ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு நிலைகளும் இரண்டு ருகூவுகளும் உள்ளதாகும். இன்னும் நிரப்பமாவது, முதல் நிலையில் சூரத்துல் ஃபாத்திஹாவுக்குப்பின் சூரத்துல் பகராவையோ, அல்லது அதன் அளவுள்ள ஆயத்துகளையோ ஓதுவதும், இரண்டாம் நிலையில் ஃபாத்திஹாவுக்குப் பின் இருநூறு ஆயத்துகள் ஓதுவதுமாகும். இரண்டாம் ரக்அத்தின் முதல் நிலையில் ஃபாத்திஹாவுக்குப் பின் நூற்றி ஐம்பது ஆயத்துகளும், இரண்டாம் நிலையில் ஃபாத்திஹாவுக்குப்பின் நூறு ஆயத்துகளும் ஓதுவதாகும். அவ்வாறே முந்தின ரக்அத்தின் முதல் ருகூஇல் நூறு ஆயத்துகள் ஓதும் அளவுக்கும், இரண்டாம் ருகூஇல் எண்பது ஆயத்துகள் ஓதும் அளவுக்கும், இரண்டாவது ரக்அத்தின் முதல் ருகூஇல் எழுபது ஆயத்துகள் ஓதும் அளவுக்கும், இரண்டாவது ருகூஇல் ஐம்பதுஆயத்துகள் ஓதும் அளவுக்கும் தஸ்பீஹ்கள் செய்வதாகும்.

ஒருவர் எந்த ரக்அத்தின் இரண்டாம் நிலையில் இமாமுடன் வந்து சேர்ந்தாலும் அந்த ரக்அத்து கணக்கில் சேராது. ஏனெனில், இரண்டாம் நிலை அதிக பட்சமாகச் செய்யப்படுவதாகும்.

தக்பீர் கட்டிய பின் கிரகணம் முடிந்து விட்டாலும், அல்லது சூரியன் மறைந்து விட்டாலும், அல்லது சூரியன் உதயமாகி விட்டாலும் தொழுகை நிரப்பமாக்கப்படும். பிறகு குத்பாவும் ஓதப்படும்.

இந்தத் தொழுகையைக் குறிப்பிட்ட நேரத்தில் தொடுத்துக் கொள்ளாவிட்டால் அது தவறிவிடும். கிரகணத்திற்குப் பின் தொழுகையை ஆரம்பிக்கக் கூடாது.

சூரிய கிரகணத்திற்கு மெதுவாக கிராஅத் ஓதுவதும், சந்திர கிரகணத்திற்கு சப்தமிட்டு ஓதுவதும் சுன்னத்தாகும்.

சூரிய கிரகணத் தொழுகையில் ஒரு ரக்அத் முடிந்தவுடன் சூரியன் மறைந்து விட்டாலும், சந்திர கிரகணத் தொழுகையின் போது சூரியன் உதயமாகிவிட்டாலும் முந்தியதில் சப்தமிட்டும் இரண்டாவதில் மெதுவாகவும் ஓதுவது,பலமான சொற்படி, சுன்னத்தாகும்.

கிரகணத் தொழுகையை ஜும்ஆ பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுவதும், அவ்விடத்திலேயே குத்பா ஓதுவதும் ஏற்றமாகும். தனியாகத் தொழுபவனுக்கு தொழுவது மட்டும் சுன்னத்தாகும்; குத்பா சுன்னத்தல்ல.

வெள்ளிக்கிழமையும், பெருநாளும் ஒரே நாளில் வந்தால், இரண்டிற்கும் அதனதன் தொழுகைகளையும், குத்பாக்களையும் தனித்தனியாக ஓத வேண்டும். அல்லது ஜும்ஆவுடைய குத்பா ஒன்றே இரண்டுக்கும் போதுமானதாகும். எனினும், ஜும்ஆவுடைய குத்பாவைக் கொண்டு ஜும்ஆவை மட்டும் நாடுவது ஷர்த்தாகும். ஜும்ஆ குத்பாவைக் கொண்டு இரண்டையும் நாடினாலும், அல்லது பெருநாள் குத்பாவை மட்டும் நாடினாலும் ஜும்ஆ நிறைவேறாது.

பெருநாளும், கிரகணமும், ஒன்றாக வந்தால் அதனதன் தொழுகைக்குப்பின் இரண்டுக்கும் ஒரு குத்பா போதுமானதாகும். ஜும்ஆவும், கிரகணமும், பெருநாளும் ஒரே நாளில் ஏற்பட்டால் அனைத்திற்கும் சேர்த்து ஜும்ஆவுடைய குத்பா போதுமாகும். எனினும் அதில் கிரகண சம்பந்தமான விஷயங்களையும், பெருநாளுடைய ஃபித்ரா, அல்லது உள்ஹிய்யா, மற்றும் சதக்கா ஆகியவற்றையும் எடுத்துக் கூறுவது சுன்னத்தாகும். எனினும் அந்த குத்பா ஜும்ஆவுடைய குத்பாவைக் கொண்டு மட்டும் நிய்யத்துச் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும்.

பூமியதிர்ச்சி, கடினமான புயல், இடி போன்ற ஆபத்துகள் ஏற்படுகின்ற நேரங்களில் ஊரைவிட்டு வெளியிலுள்ள மைதானத்திற்குச் சென்று தனித்தனியாகத் தொழுது அல்லாஹுதஆலாவிடம் கெஞ்சி துஆக் கேட்பது சுன்னத்தாகும்.

How to pray Eclipse Prayer:
Praying solar or lunar eclipse prayer during the period of eclipse is a sunnah. To pray as a jamaah and to conduct two qutbahs after the prayer, is as per our religion.
1. In simplicity: You can pray this prayer with two rakaaths like any other dhuhur sunnah prayer.
2. In full: We pray two rakaaths, with each rakaath having two stands and two rukus.

In First Rakaath:
In first stand, we recite surah bakarah [or its equivalent in number of ayaaths] after surah fathiha.
In second stand, we recite 200 ayaaths after surah fathiha.
In first rukuh, we recite tasbeeh equivalent to the time duration of reciting 100 ayaaths.
In second rukuh, we recite tasbeeh equivalent to the time duration of reciting 80 ayaaths.

In Second Rakaath:
In first stand, we recite 150 ayaaths after surah fathiha.
In second stand, we recite 100 ayaaths after surah fathiha.
In first rukuh, we recite tasbeeh equivalent to the time duration of reciting 70 ayaaths.
In second rukuh, we recite tasbeeh equivalent to the time duration of reciting 50 ayaaths.